# ‘அஸ்தினாபுரம்’ நாடகத்தில் தொன்மம் – மறுகட்டமைப்பு

**முனைவர் த.காந்திமதி (Dr.D.GANDHIMATHI)**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**

**மதுரைக்கல்லூரி (தன்னாட்சி), மதுரை 625 011**

**drmathithamizh@gmail.com**

22

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்க்கை எதார்த்தமானது. காலங்காலமாக மனிதன் அனுபவித்து வரக்கூடிய இன்பதுன்பங்கள், கல்விகேள்விகள், அவனுடைய எண்ணவோட்டங்கள், எதிர்பாரா நிகழ்வுகள், இழப்புகள், மகிழ்வான நிகழ்வுகள் போன்றவை காலச்சூழலினால் உருவாக்கப்படுபவை. சூழலுக்கேற்றவாறு, அனுபவத்திற்கேற்றவாறு எண்ணங்களும் கருத்துகளும் கொள்கைகளும் செயல்பாடுகளும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. எந்தவொன்றையும் அப்படியே நம்பாமல் கேள்விக்குட்படுத்த வேண்டும் என்பர் பெரியோர். ”எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு” (குறள்.423) என்பது வள்ளுவர் வாக்கு. புராண, இதிகாசப் பழங்கதைகள் போன்றவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், அவற்றின் அவலங்களை, அவற்றில் இடம்பெற்றுள்ள நியாயப்படுத்தப்பட்ட பாத்திரங்களின் உண்மைத் தன்மைகளை, சுயநலத்தின்பொருட்டுச் சமூகத்தின் பலருடைய அழிவை நுணுகி ஆராய்ந்து வெளிப்படுத்துவது தொன்மத் திறனாய்வு ஆகும். நம் நாட்டின் இருபெரும் இதிகாசங்களுள் ஒன்று இராமாயணம் மற்றது மகாபாரதம். க்ருஷ்ணத்வைபாயனர் எனும் இயற்பெயர் கொண்ட வேத வியாசர் சொல்ல, விநாயகப்பெருமான் எழுதியதாகச் சொல்லப்படுவது மகாபாரதம். வடமொழியில் ஒருலட்சம் சுலோகங்களால் ஆனது இது. இதன் கிளைக்கதைகளை மட்டும் எடுத்துக்கொண்டோ, குறிப்பிட்ட கதைமாந்தர்களை மட்டும் முன்னிலைப்படுத்தியோ சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் போன்றவை வெவ்வேறு மொழிகளில் வெளிவந்துள்ளன. இந்தி மொழியில் நந்தகிஷோர் ஆச்சார்யா எழுதிய நாடகங்களுள், சரஸ்வதி ராம்நாத் தமிழில் மொழிபெயர்த்த ‘மகாபாரதத்தில் பெண்ணியம்‘ எனும் நாடக நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூலில் இரு நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. ஒன்று ‘அஸ்தினாபுரம்‘. மற்றொன்று ‘உடலுக்கப்பால்‘. இரு நாடகங்களுமே, மகாபாரதக் கதைமாந்தர்களுள் பெண்ணுணர்வுகளுக்குத் தரப்படாத மதிப்புப் பற்றியவை. அவற்றுள், ‘அஸ்தினாபுரம்’ எனும் நாடகத் தொன்மத்தின் மறுகட்டமைப்புக் குறித்து இக்கட்டுரை மதிப்பிட முற்படுகிறது.

**திறவுச் சொற்கள்:** அஸ்தினாபுரம், தொன்மம், மறுகட்டமைப்பு, நந்தகிஷோர் ஆச்சார்யா, சரஸ்வதி ராம்நாத்.

## ‘அஸ்தினாபுரம்’ நாடகத்தில் தொன்மம் – மறுகட்டமைப்பு

பழங்கதைகளின் நிகழ்வுகளை, கிளைக்கதைகளை, கதைமாந்தர்களின் எண்ணவோட்டங்களை, மனவுணர்வுகளைத் தம் படைப்புகளில் எடுத்தாள்வது தொன்மம் ஆகும். “உலகத்தின் தோற்றம் பற்றிய கதை; மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான் என்பது பற்றிய கதை; காதல் கதை; வெள்ளம், பஞ்சம் பற்றிய கதை; காடு, கடல் குறித்த கதை; சாவைப் பற்றிய கதை; மாபெரும் வீர்களின் கதை; பெரும் போர்கள் பற்றிய கதை; ஐம்பெரும் பூதங்கள் பற்றிய கதை என்று உலக நாகரீகம் அனைத்திலும் தோன்றியுள்ள கதைகளைத் தூய தொன்மங்கள் (Pure Myths) அல்லது ஆதிகாலத் தொன்மங்கள் (Primitive Myths) என

அழைக்கின்றனர்” (பேரா.க.பஞ்சாங்கம், தொன்மத் திறனாய்வு, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், ப.112).

காலங்காலமாகப் பின்பற்றப்பட்டுவரும் ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த சாதி, மத ரீதியான சிந்தனைகளையும் இழிநிலைகளையும் கேள்விக்குட்படுத்துவது திறனாய்வு. படைப்புகளின் ஊடே இச்சமூக அவலங்களை எள்ளல் சுவையுடன் படைத்து, சிந்திக்கத் தூண்டிய எழுத்தாளர்கள் பலர். இராமாயண, மகாபாரத இதிகாசக்கதைகள் மற்றும் கிளைக்கதைகள் ஆகியவை கர்ணபரம்பரையாக (செவிவழிச் செய்தியாக), நாட்டுப்புற மக்களால் பரவலாகப் பேசப்பட்டவையாக உள்ளன. அக்கதைகளே இலக்கியங்களாயின. அவற்றை மறுவாசிப்புக்குட்படுத்தி, மறுகட்டமைப்பாகப் படைக்கப்பட்ட படைப்புகள் எழுத்தாளர்களின் மனநிலையைத் தெளிவுறப் படம்பிடித்துக்காட்டியுள்ளன. காலத்திற்கேற்ற வகையில் அவை மாற்றம்பெறுகின்றன. எழுத்தாளர்கள் பலர், நேரடியாகவோ மறைமுகமாகவோ தொன்மங்களைத் தம் படைப்புகளில் கோடிட்டுக் காட்டுவதுடன் மட்டுமல்லாது, மறுகட்டமைப்பும் செய்துள்ளனர். சான்றாகப் புதுமைப்பித்தனின் சிறுகதைகளைக் கூறலாம். அவருடைய ஆற்றங்கரைப் பிள்ளையார், புதிய நந்தன், கவந்தனும் காமனும், புதிய கந்தபுராணம், அகல்யை, சாபவிமோசனம் போன்றவை.

“நமது இலக்கியங்களில் இராமாயண, மகாபாரதக் கதைகளில் வரும் பாத்திரங்கள், நிகழ்ச்சிகள், கருத்துக்கள் பல உள்ளவாறும் வேற்றுருவம் பெற்றும் வரக்காணலாம். இராமன், பரதன், இலக்குவன், குகன், அனுமன், இராவணன், வீடணன், கும்பகருணன், சீதை, தருமன், வீமன், விசயன், கர்ணன், பாஞ்சாலி ஆகியோர் வெவ்வேறு குணநலன்களின் பிரதிநிதிகளாக அவற்றின் மூலபடிவங்களாகவே ஆக்கப்பட்டுள்ளனர்” (பேரா.க.பஞ்சாங்கம், தொன்மத் திறனாய்வு, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், பக்.21-22).

இந்தி மொழியின் நாடக ஆசிரியர் நந்தகிஷோர் ஆச்சார்யா, எழுத்தாளர் மட்டுமல்லர். கவிஞர், விமர்சகர், நாடக ஆசிரியர், சமூகவியலாளர் மற்றும் பத்திரிகைத் துறையில் அனுபவம் மிக்கவர். ‘அத்தினாபுரம்‘ என்பது, மகாபாரதப் பெண்களின் துன்பங்கள் குறித்த நாடகம். பெண் பாத்திரங்களைப் பற்றி நாம் அறியாத இன்னொரு பக்கத்தைக் காட்டியுள்ளார்; மறுகட்டமைப்புக்கு உட்படுத்தியுள்ளார். இவர் எழுதிய வேறு சில நாடகங்கள் தேஹாந்தர், பாகல்கர், குலாம் பாதுஷா(ஹ்) ஆகியவை. சரஸ்வதி ராம்நாத் தமிழில் மொழிபெயர்த்த ‘மகாபாரதத்தில் பெண்ணியம்’ எனும் நாடக நூலில் இடம்பெற்றுள்ள அஸ்தினாபுரம் எனும் நாடகத்தைத் தொன்மத்தின் மறுகட்டமைப்பு எனும் நிலையில் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

பாண்டவர்களின் தாயாகிய குந்தி தேவியும் விதுரரின் தாயாகிய சுபாவும் பேசிக்கொள்ளும் உரையாடலாக இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது. குருக்ஷேத்திரப்போரில் பாண்டவர்கள் வெற்றிகொண்ட பிறகு நடந்தவை குறித்து இந்நாடகம் விரிகின்றது.குந்தியின் பல்வேறு ஐயங்களைத் தெளிவுபடுத்துபவளாக சுபா சித்திரிக்கப்பட்டுள்ளாள்.

போரில் வென்ற யுதிஷ்டிரன் அஸ்தினபுரியின் அரசனானபிறகு, ஒருநாள் இரவு விதுரரின் இல்லத்தில் குந்தியும் சுபாவும் பேசிக்கொண்டிருக்கின்றனர். அப்போது அரண்மனையிலிருந்து ஆங்குவந்த விதுரர், இரு பெண்களிடமும் திருதராட்டிரன், காந்தாரி மற்றும் குருவம்சத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் வானப்ரஸ்தம் செல்ல முடிவெடுத்தமையைத் தெரிவிக்கிறார். அதுவும் நாளை விடிந்தவுடனேயே கிளம்புவதாகச் சொல்கிறார். குறிப்பாகக் காந்தாரிக்கு அஸ்தினபுரத்தில் இருப்பதற்கே விருப்பமில்லை. திருதராட்டிரன் வந்தாலும் வராவிட்டாலும், தான் வனம் செல்வதில் காந்தாரி உறுதியுடனிருப்பதாக விதுரர்

தெரிவித்தார். காரணம் புரியாத குந்திக்குச் சுபா விளக்குகிறாள். 'குந்தியின் பிள்ளைகள் பாண்டவர்களாகவே (பாண்டுவின் பிள்ளைகளாகவே) அடையாளப்படுத்தப் படுகின்றனர். கௌரவர்கள் மட்டுமே குருவம்சத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். அதனால்தான் பிதாமகர் பீஷ்மர்கூட, அறம் என்பது பாண்டவர்கள் பக்கம் இருப்பினும் அவர் கௌரவர்கள் பக்கமே இருந்தார்.' என்று குறிப்பிடுகிறாள்.

'பாண்டு குருவம்சத்தவனாகையால் தன் பிள்ளைகளும் குருவம்சத்தவர்கள் தாமே' என்ற குந்தியின் கேள்விக்கு சுபா, பாண்டவர்கள் யாருமே பாண்டுவின் குருதியல்லவே! அதனால், பிதாமகர் மட்டுமல்லாமல் குருவம்சத்தைச் சேர்ந்த யாருமே பாண்டவர்களைக் குருவம்சத்தவர்களாக ஏற்கவில்லை என்பதைத் தெரிவிக்கிறாள். மேலும், பிதாமகருக்குத் தாம் செய்துகொடுத்த சத்தியமும் குருவம்சமும்தான் உயர்ந்தவை. வேறெதுவும் உயர்ந்ததன்று என்பதையும் தெளிவுபடுத்துகிறாள்.

தன் இளவல் விசித்திரவீரியனுக்கு மணமுடித்து வைப்பதற்காக, காசிமாநகரின் இளவரசியர் மூவரையும் அவர்களின் சுயம்வரத்திலிருந்து தூக்கிவந்தவர் பீஷ்மர். அம்பை, அம்பிகை, அம்பாலிகை ஆகிய மூவருள்ளும் மூத்தவளாகிய அம்பை முன்பே சௌப நாட்டு மன்னன் சால்வனுடன் காதல்வயப் பட்டிருந்தமையால், பீஷ்மரால் அவள் திருப்பி அனுப்பப்படுகிறாள். அம்பிகையும் அம்பாலிகையும் விசித்திரவீரியனின் மனைவியராகின்றனர். பீஷ்மர் தம் தந்தை சந்தனுவுக்காகப் பிரம்மச்சரிய விரதம் பூண்டது அம்பிகைக்கும் அம்பாலிகைக்கும் தெரியாது. அவர்கள், சுயம்வரத்திற்கு வந்துள்ள அரசர்களையெல்லாம் வென்று தம்மை அழைத்துச் செல்பவரின் வீரதீரச் செயல்களை ஆசைதீரப் பார்த்தனர். அவர்தாம் தங்களை மணம்புரிந்துகொள்வார் என எண்ணினர். மாறாக, விசித்திரவீரியனுடன் திருமணம் முடிகின்றது.

மக்கட்பேறின்றி விசித்திரவீரியன் இறந்ததும், அவனுடைய தாயாகிய சத்தியவதி ஆட்சிப்பொறுப்பேற்கிறாள். அடுத்து குரு வம்சத்தைத் தழைக்கச் செய்வதற்காக 'நியோக்'கிற்கு ஒத்துக்கொள்ளுமாறு பீஷ்மனுக்குக் கட்டளையிடுகிறாள். 'நியோக்' என்பது, "பண்டைய ஆரிய பரம்பரையில் குழந்தைகளற்ற விதவையோ, குழந்தையில்லாத அதாவது, கணவன் மூலம் குழந்தைப்பேற்றை அடையமுடியாத பெண்ணோ தன் கணவனின் உடன்பிறந்தவர்கள் அல்லது தங்களது கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் மூலம் மகப்பேற்றை அடைவது தர்மத்திற்குப் புறம்பானதாகக் கருதப்படவில்லை" (ப.14). ஆனால், பீஷ்மர் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டதால் ஏற்கமறுக்க, சத்தியவதி மச்சகந்தியாக இருந்தபோது தனக்குப் பிறந்த க்ருஷ்ணத்வைபாயனரை (வியாசர்) வேண்டிக்கொள்ள அவர் சம்மதிக்கிறார்.

சத்தியவதி அம்பிகையிடம் 'நியோக்' குறித்துச்சொல்லி, உன் மைத்துனர் வருவார் என்றுரைக்க, அம்பிகையோ பீஷ்மரை மனத்தில் நினைத்துக்கொள்கிறாள். பிரம்மச்சரிய விரதம்பூண்ட ஒருவர் தனக்காக அவ்விரதத்தைக் கைவிடுகிறார் என்ற மகிழ்ச்சியைச் சுபாவிடம் பகிர்ந்துகொள்கிறாள். ஆனால், வந்தவர் வியாசர். அம்பிகையால் அவரை எதிர்கொள்ள முடியவில்லை; ஏற்கமுடியவில்லை. முனிவர் விகாரமானவர். அவருடைய ஞானமும் தவமும் அச்சத்தையே தோற்றுவித்தது. எந்தப் பெண்ணாலும் அதிலும் அரசகுமரிகளால் இப்படிப்பட்ட ஒருவரை ஏற்கவே முடியாது. பக்தி உண்டு. மனத்தில் விருப்பமில்லை. அதனால், பார்வையற்ற திருதராட்டிரன் அம்பிகைக்கும் உடல் வெளிறிப்போய் நோயுற்ற பாண்டு அம்பாலிகைக்கும் பிறக்கின்றனர்.

மீண்டும் அம்பிகையிடம் வியாசர் மூலமாக மகப்பேறு வேண்டி சத்தியவதி வருகிறாள். பீஷ்மரும்

உடன்வர, அம்பிகை பீஷ்மரின் பிரம்மச்சரிய விரதமே தவறானது எனக் கூறுகிறாள். "விருப்பமில்லாத சமர்ப்பணத்தின் வேதனையின் வலியை மகாமுனிவரும் அறியமுடியாது. தங்களாலும் இயலாது. உங்களையெல்லாம் பொறுத்தவரை பெண் என்பவள் மகப்பேற்றுக் கருவி. ஒரு சாதனம் அவ்வளவுதான்" (ப.31) எனத் தன் மனக்குமுறலைக் கொட்டுகிறாள் அம்பிகை. இந்நாடக ஆசிரியர் அம்பிகை வாயிலாகவும் சுபாவின் வாயிலாகவும் தொன்மத்தை மறுகட்டமைப்புச் செய்துள்ளார்.

பீஷ்மரின் பிரம்மச்சரிய விரதத்தைக் குருவம்சத்திற்கேற்பட்ட சாபம் என்கிறாள் அம்பிகை. பீஷ்மரின் பித்ருபக்தியை மூடத்தனம் என்கிறாள். அவருடைய மூடத்தனத்தின் பலனைத்தான் குருவம்சம் முழுமையும் அனுபவிக்கிறது என்று குற்றம்சாட்டுகிறாள். தேவவிரதரின் தந்தை சந்தனு செய்தது அநீதி என்பதை இவர் அவருக்கு உணர்த்தியிருக்க வேண்டும். இவர் இளவரசர் ஆதலால் நாட்டிற்கு நல்லனவற்றை மட்டுமே சிந்தித்து அவரது தனிப்பட்ட ஆசையைத் தடுத்திருக்கவேண்டும். அதுமட்டுமில்லாமல், "சந்தனு மகாராசரின் தனிப்பட்ட பலவீனத்துக்குரிய தண்டனையை நாடு முழுவதும் ஏன் அனுபவிக்க வேண்டும்? தாங்களே வயதான கணவருடன் எத்தகைய வாதனையைச் சகித்துள்ளீர்கள்?" (ப.32) என்று சத்தியவதியைக் கேள்வி கேட்கிறாள். ஆனாலும், சத்தியவதி அவளிடம் வியாசருக்காகக் காத்திருக்கும்படிக் கூறிவிட, அம்பிகையின் ஆன்மா மறுக்கிறது. எனவே, அம்பிகை சுபாவைத் தயார்செய்கிறாள். சுபாவை எதிர்பாராத வியாசர், "அம்பிகா பீஷ்மனைத்தவிர வேறெவரையும் ஏற்றுக்கொள்ள மாட்டாள் என்பது எனக்குத்தெரியும்" (ப.36) என்று கூறுகிறார். அதுமட்டுமன்று. அம்பிகையின்பால் பீஷ்மருக்கும் ஓர் எண்ணம் இருந்தது என்பது சுபாவின் கூற்று.

பீஷ்மரின் எண்ணங்களைக் குறைகூறுபவள் அம்பிகை மட்டுமல்லள். சுபாவும்தான். சுபா குந்தியிடம், "இளம்பெண்ணான சத்யவதி தேவியின் வைதவ்யத்தை (விதவைக்கோலம்), அம்பை உயிர்துறந்ததை, அம்பிகையின் துயரத்தை, அணுஅணுவாக அம்பாலிகா துயரத்தில் கரைந்துகொண்டிருந்ததை நீ பார்த்திருக் வேண்டும். பார்த்திருந்தால் பீஷ்மரின் பிரதிக்ஞை (சபதம்) ஒரு பாவமும் அறியாத இவர்களின் வாழ்க்கையை எவ்வாறு நிலைகுலைத்துவிட்டதென்று புரியும். பீஷ்மர் தனது பிரதிக்ஞையை இப்படிப் பற்றிக்கொண்டிராவிடில் இந்த மகாபாரதப் போரே நடந்திருக்காது (பக்.47-48) எனக் குறிப்பிடுகிறாள். மேலும், 'பீஷ்மர் மட்டும் மனம்வைத்திருந்தால், இக்கலகத்தை, குருஷேரத்திரப்போரை, பேரழிவை, மனித உயிர்களின் படுநாசத்தைத் தடுத்திருக்க முடியும். திருதராட்டிரன் அம்பிகையின் மகன் என்பதாலும் துரியோதனன் அவளுடைய பெயரன் என்பதாலும் குருவம்சம்மீதுகொண்ட மாறாக்காதலினாலும்தான் பீஷ்மர் அநீதிக்குத் துணைநின்றார்' எனவும் சுபா கூறுகிறாள்.

இதேபோலவே, எழுத்தாளர் ஜெயமோகனின் மகாபாரதம் குறித்த 'வெண்முரசு' புதினத்தில், காசிநாட்டு இளவரசியரை அஸ்தினபுரிக்குக் கொணர்ந்த பீஷ்மரிடம் அம்பை சால்வனை விரும்புவதைத் தெரிவிக்க, சௌப நாட்டுக்கு அனுப்பிவைக்கிறார். அம்பையை ஏற்க மறுத்த சால்வன், பல்வேறு அரசியல் காரணங்களைக்கூற, மீண்டும் அன்னைமடியில் ஆறுதல் தேடக் காசிக்கே செல்கிறாள் அம்பை. காசிராசன் அன்னையைக் காண மட்டுமல்லாது அரண்மனையின் உள்ளேகூட அனுமதிக்கவில்லை. மீண்டும் அஸ்தினாபுரிக்கு வந்த அம்பை, பீஷ்மரிடமே தன்னை ஏற்றுக்கொள்ளச் சொல்லி மன்றாடுகிறாள். இவையெல்லாம் மகாபாரதத்தில் இடம்பெறுபவைதாம். ஆனால், இத்தொன்மக் கதையை எழுத்தாளர் எங்ஙனம் மறுகட்டமைப்புச் செய்கிறார்?

பீஷ்மர் தன்னைத் தேடிவந்த அம்பையிடம், “இளவரசி, நான் காமத்தை ஒறுக்கும் நோன்பு கொண்டவன். என் தந்தைக்குக் கொடுத்த வாக்கு அது. அதை நான் மீறமுடியாது” என்றார். கூரிய விழிகளால் பார்த்தபடி “இல்லை, அதை நீங்கள் உங்களை நோக்கி சொல்லிக்கொள்ளமுடியாது” என்றபடி அம்பை, “நான் உங்களை ஏன் ஏற்றுக்கொண்டேன் என்று சற்றுமுன்னர்தான் எனக்குப்புரிந்தது, நம் கண்கள் சந்தித்தபோது… நீங்கள் முன்பு என்னைப்பார்த்த முதல்பார்வையே பெண்ணைப் பார்க்கும் ஆணின் பார்வைதான். இன்று இவ்வுலகத்திலேயே நான் நன்றாக அறிந்தவர் நீங்கள்தான். சுயம்வரப்பந்தலில் முதன்முதலில் என்னைப்பார்த்ததும் நீங்கள் அடைந்த சலனத்தை நானும் கவனித்திருக்கிறேன் என்று இப்போதுதான் நானே அறிந்தேன். நாண் விம்மி ஒலிக்கும் வில்லை ஏந்தியபடி என்னைத் தூக்குவதற்காக உங்களை அறியாமலே என்னை நோக்கி நான்கு எட்டு எடுத்து வைத்தீர்கள். அதுதான் உங்கள் அகம். உடனே திரும்பி சீடர்களை அழைத்தீர்களே அது உங்கள் புறம்… இங்கே நீங்கள் சொல்லும் அத்தனை காரணங்களும் உங்கள் புறம் மட்டுமே. நான் உங்கள் அகத்துக்குரியவள்…உங்கள் அகத்துடன் உரையாடிய முதல் பெண் நான்…” (ஜெயமோகன், வெண்முரசு, முதற்கனல், 16ஆம் அத்தியாயம்) என்று அம்பை கூறுவதிலிருந்து பீஷ்மர் அம்பையைப் பார்த்தவுடனே மனத்தில் அவளை எண்ணியிருந்தாலும், தான் செய்த சத்தியத்தின்பால் கொண்ட பிடிப்பினாலும் புகழ் மறையுமே எனும் எண்ணத்தாலும் தனது அகத்தையும் ஆன்மாவையும் அடக்கிப் பெண்ணின் சாபத்தை ஏற்றுக்கொண்டார் என்பது தெளிவாகின்றது.

இவ்வாறாக, தொன்மக் கதைகளின்வழியாகச் சமூகப் பண்பாடுகள் எங்ஙனம் கட்டமைக்கப்பட்டு மக்களிடம் சேர்கின்றன என்பதும் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருபவை எங்ஙனம் மாற்றம்பெறுகின்றன என்பதும் இத்தொன்மக் கதைகளின் மறுகட்டமைப்புகள் மூலம் அறியப்படுகின்றன. ஒரேயொரு மனிதரின் (பீஷ்மரின்) சத்தியம், எவ்வாறு எல்லாருடைய வாழ்க்கையில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்தது என்பதையும் இந்நாடகம் தெளிவுபடுத்தியுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. நந்தகிஷோர் ஆச்சார்யா- மகாபாரதத்தில் பெண்ணியம் சரஸ்வதி ராம்நாத் (மொ.பெ.) (இரு நாடகங்கள்) அலைகள் வெளியீட்டகம் சென்னை - 24, மு.ப. 1996
2. பஞ்சாங்கம், க., பேரா. தொன்மத் திறனாய்வு, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர் - 7, மு.ப. 2005
3. www.hindisamay.com/nandakishoreaachaarya
4. www.jeyamohan.in/venmurasu/mutharkanal